தினமலர்
உண்மையின் உரைகல்

## கடந்த 2011-12ம் நிதி ஆண்டில் நாட்டின் யூரியா உர இறக்குமதி 78 லட்சம் டன்

ஜூன் 08,2012,00:34



புதுடில்லி:சென்ற 2011-12ம் நிதியாண்டில், இந்தியா, உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து, 78 லட்சத்து 34 ஆயிரம் டன் யூரியா உரத்தை இறக்குமதி செய்துள்ளது. இது, முந்தைய 2010-11ம் நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை விட, 18.5 சதவீதம் அதிகம் என, அரசுத் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி:உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு, ரசாயன உரங்கள் உற்பத்தி இல்லாததால், இவை பெருமளவில், இறக்குமதி செய்யப்படுகிறது. வேளாண் உற்பத்தியை அதிகரிக்க, உர பயன்பாடு மிகவும் அவசியமாக உள்ளது.சென்ற நிதியாண்டில், இந்தியா, சராசரியாக, ஒரு டன் யூரியாவை, 481.74 டாலருக்குவாங்கியது. இது, முந்தைய நிதியாண்டில் வாங்கப்பட்ட தொகையை விட, 47.10 சதவீதம் அதிகமாகும்.

இறக்குமதி மதிப்பு:சென்ற நிதியாண்டில், நாட்டின் யூரியா இறக்குமதி மதிப்பு, 377 கோடி டாலராக (18 ஆயிரத்து 850 கோடி ரூபாய்) இருந்தது.கடந்த 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் மொத்த யூரியா இறக்குமதியில், சீனாவின் பங்களிப்பு, 38 சதவீதமாக இருந்தது. ஆனால், சென்ற நிதியாண்டில், ஓமன் நாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட உர இறக்குமதி, 24 லட்சம் டன்னிற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. ஓமன் நாட்டுடன், இந்தியா மேற்கொண்டுள்ள நீண்ட கால, ஒப்பந்தத்தால், அந்நாட்டிலிருந்து, உர இறக்குமதி அதிகரித்துள்ளது.

உர இறக்குமதியில், ஓமன் நாட்டை அடுத்து, ஈரானும், சீனாவும் உள்ளன. மேற்கண்ட இரு நாடுகளின் பங்களிப்பு முறையே, 25.5 சதவீதம் மற்றும் 16.3 சதவீதம் என்றளவில் உள்ளது. மேலும், காமன்வெல்த் குடியரசு நாடுகளிலிருந்து, மேற்கொள்ளப்படும் உர இறக்குமதி, 14.1

சதவீதம் என்றளவில் உள்ளது.
மலேசியா:மேற்கண்ட நாடுகள் தவிர, சென்ற நிதியாண்டில், ரஷ்யா, சவுதி அரேபியா, கத்தார், இந்தோனேஷியா, குவைத், பஹ்ரெய்ன், வியட்நாம், ருமேனியா, ஐக்கிய அரபு நாடுகள், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவிற்கு யூரியா உரம் இறக்குமதி ஆகியுள்ளது.இந்தியா, இதற்கு முன்பாக எகிப்து, லாட்வியா, லிபியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து உரங்களை இறக்குமதி செய்து வந்ததுவந்தது.

## அரசின் கோதுமை கையிருப்பு:5 கோடி டன்னை தாண்டியது

ஜூன் 08,2012,00:31



புதுடில்லி:சென்ற 1ம் தேதி வரையிலுமாக, மத்திய அரசு, அதன் கிடங்குகளில் வைத்துள்ள கோதுமை கையிருப்பு, 5.02 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இது, மத்திய அரசு, நிர்ணயித்திருந்த இலக்கை விட, 40 லட்சம் டன் அதிகமாகும்.இதேபோன்று, அரிசி கையிருப்பும், 3.21 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. மத்திய அரசு, 1.22 கோடி டன் அரிசியை கையிருப்பு வைத்திருக்கும் வகையில் இலக்கு நிர்ணயித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
கடந்த மாத இறுதி நிலவரப்படி, மத்திய அரசின் கைவசம், 3.82 கோடி டன் கோதுமையும், 3.29 கோடி டன் அரிசியும் இருந்தது.கடந்த 2009ம் ஆண்டு முதல், மத்திய அரசு, மாதம் ஒன்றுக்கு, கூடுதலாக, 30 லட்சம் டன் கோதுமையையும், கூடுதலாக, 20 லட்சம் டன் அரிசியையும் கையிருப்பில் வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு @வளாண் பருவத்தில் நாட்டின் தானிய உற்பத்தி 25 @காடி டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. உற்பத்தி அதிகரிப்பாலும், தானியங்களுக்கான குறைந்தப்பட்ச ஆதரவு விலை உயர்வாலும் அரசின் தானியக் கொள்முதல் அதிகரித்துள்ளது.

## பசுந்தீவன சாகுபடிக்கு 100 சதவீத மானியம்

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2012,02:24 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: "கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை:
தமிழகத்தில் இரண்டாவது வெண்மை புரட்சி ஏற்படுத்த தமிழக அரசு விலையில்லா கறவை மாடுகளை ஏழை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. கால்நடையின் உற்பத்தி திறனை அதிகரிக்க பசுந்தீவனம் வழங்க வேண்டும்.
கடந்தாண்டில், 8,000 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய மற்றும் புரதச்சத்து மிகுந்த தீவனப்பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 100 சதீதம் மானியம் மற்றும் அதன் உபயோக மேலாண்மைக்காக அரசால், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாநில தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
தர்மபுரி மாவட்டத்தில், 300 ஏக்கர் இதன் மூலம் தீவன சாகுபடிக்கு கொண்டு வர மானியம் வழங்கப்பட்டுள்ளது. பசுந்தீவனம் கால்நடைகளுக்கு குறைவில்லாமல் கிடைக்கும் நோக்கத்துடன் இவ்வாண்டில், தமிழக அரசால் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 100 சதவீதம் மானியத்தில் இறவையில் அதிக மகசூல் தரக்கூடிய தீவனப்பயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
தர்மபுரி மாவட்டத்தில் 600 ஏக்கரில் அதிக மகசூல் தரக்கூடிய புல் வகையை சேர்ந்த கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், ரகங்கள் கோ 3, அல்லது கோ 4 சாகுபடி செய்ய 0.25 ஏக்கருக்கு 3,000 ரூபாய் வீதம் 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

## தோட்டக்கலை துறை மானியம்

பதிவு செய்த நாள் : ஜூன் 07,2012,23:39 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல்:விழிப்புணர்வு இல்லாததால் தோட்டக்கலை துறையில் இருந்து வழங்கப்படும் மானியத்தை பெற விவசாயிகள் தயங்குகின்றனர். விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. பயிர் உற்பத்தியை பெருக்க வேண்டுமென்பதற்காக தோட்டக்கலைத்துறையின் மூலம் மானியம் வழங்கும் திட்டத்தை 2005ல் அ.தி.மு.க., அரசு அறிமுகப்படுத்தியது. விவசாயிகளுக்கான மானிய தொகை ரொக்கமாக வழங்கப்பட்டு வந்தது. அதன் பின் வந்த தி.மு.க., அரசில் பணபட்டுவாடா நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக

விவசாயிகளுக்கு தேவைப்படும் இடுபொருட்களை விநியோகித்து வந்தனர். தரமில்லாததால் இவற்றை புறக்கணித்த விவசாயிகள் தோட்டக்கலைத் துறையின் உதவி மற்றும் ஆலோசனையை பெறுவதை நிறுத்திக்கொண்டு கூலி வேலையில் கவனம் செலுத்த துவங்கினர்.
தற்போதைய அ.தி. மு.க., ஆட்சியில் மீண்டும் விவசாயிகளுக்கு பணபட்டுவாடா துவக்கப்பட்டுள்ளது. ரொக்கத்திற்கு பதிலாக செக் மற்றும் டி.டி.,மூலமாக பணம் வழங்கப்படுகிறது. இதனை பெறுவதற்கு விவசாயிகள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.
வெங்காயம், மிளகாய், உதிரிபூக்கள், சம்பங்கி, கிழங்கு நடவு, திசு வாழை போன்றவற்றை பயிர் செய்பவர்களுக்கு பராமரிப்பு செலவிலிருந்து ரூ.30 ஆயிரம் வரை முழு தொகை மற்றும் தேவையான இடுபொருட்களை தோட்டக்கலைத்துறையினர் வழங்குகின்றனர். கண்வலி கிழங்கு பயிர் செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.70 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. இவற்றை பெறுவதற்கு விவசாயிகள் எவரும் விண்ணப்பிப்பதில்லை.
இது குறித்து திண்டுக்கல் துணை தோட்டக்கலை அலுலர் தினகரன் கூறியதாவது:விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லை. ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும் தோட்டக்கலைத்துறையின் உதவி இயக்குனர் அலுவலகம் உள்ளது.
சிட்டா, அடங்கல், ரேஷன்கார்டு நகல், பாஸ்போர்ட் போட்டோவுடன் இந்த அலுவலகத்திற்கு விவசாயிகள் சென்றால் அவர்களை பதிவு செய்து கொள்வர். அதன் பின், மானியம் அவர்கள் வீடுதேடி வரும், என்றார்.

## விவசாயிகளுக்கு "கிரிடிட்' கார்டுநான்கு மாவட்டங்களில் அமல்

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2012,02:41 IST

தேனி:தேனி உட்பட நான்கு மாவட்ட விவசாயிகளுக்கு, "கிஷான் கிரிடிட் கார்டு' வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளிலும், பயிர்க்கடன் உட்பட பல்வேறு கடன்களை எளிதாக பெறும் வகையில், மத்திய அரசு "கிஷான் கிரிடிட் கார்டு' வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.முதற்கட்டமாக தேனி, கன்னியாகுமரி, அரியலூர்,சேலம் மாவட்டங்கள் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களில் உள்ள 100 சதவீத விவசாயிகளும் பயனடையும் வகையில், அனைவருக்கும் கார்டு வழங்கப்படும். இதற்காக,விவசாயிகளின் பட்டியலை விவசாயத்துறை உதவியுடன், முன்னோடி வங்கி நிர்வாகம் தயாரித்து வருகிறது. இச்சேவை மற்ற மாவட்டங்களிலும் விரைவில் அறிமுகமாக உள்ளது

## பயிர் இழப்பீட்டு திட்டத்தில்விவசாயிகளை சேர்க்க நடவடிக்கை

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2012,02:22 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி:பயிர் இழப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளை சேர்த்து அவர்களுக்கு இழப்பீட்டு தொகை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.மாவட்டத்தில் இப்கோ- டோக்கியோ என்ற கூட்டுறவு நிறுவனம் மூலம் பயிர் இழப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
இத்திட்டத்தில் விவசாயிகள் 15 ரூபாய் மட்டும் பிரிமியம் செலுத்தினால் போதும். ஓராண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கான இழப்பீடு கிடைக்கும். பயிர் எவ்வளவு சேதமாகிறதோ அதற்கேற்ப இழப்பீடு கிடைப்பது மட்டுமின்றி, விவசாயி ஒருவர் விபத்தில் இறந்தால் 50 ஆயிரம் ரூபாயும், ஊனமுற்றால் 25 ஆயிரம் ரூபாயும் இழப்பீடாக வழங்கப்படுகிறது.
போடி, பெரியகுளம் ஒன்றியங்களில் மட்டும் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் விரைவில் மாவட்டம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.இன்சூரன்ஸ் திட்டங்களில் அதிக விவசாயிகளை சேர்ப்பது குறித்து ஆலோசனை கூட்டம் இணைப்பதிவாளர் வெள்ளியங்கிரி தலைமையில் நடந்தது. இப்கோ- டோக்கியோ நிறுவன மதுரை மண்டல மேலாளர் ஸ்ரீதர், திண்டுக்கல் மண்டல மேலாளர் ஜெகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வான்கோழி, கின்னிக்கோழி வளர்ப்புக்கு திடீர் மவுசு கோவில்பட்டி பகுதியில் குஞ்சுகள் விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூன் 08,2012,02:28 IST

கருத்தை பதிவு செய்ய

கோவில்பட்டி, :- வீட்டிற்கு அருகே பாம்பு உள்பட புதிய மனிதர்கள் நடமாட்டத்தைக்கூட கண்காணித்து எச்சரிக்கை செய்யும் கின்னிக்கோழி மற்றும் பிரியாணிக்கு பெயர் போன வான்கோழி குஞ்சு வளர்ப்புகள் தற்போது பிரபலமடைந்துவருகிறது.

வீட்டு பாதுகாப்பிற்கு நாய் அவசியம் என்பதுடன், அதுவும் கொள்ளை சம்பவங்களுக்கு பெயர் போன கோவில்பட்டி பகுதிக்கு நாய் வளர்ப்பு மிகவும் அவசியம் என்கின்றனர் பொதுமக்கள். வீட்டு பாதுகா ப்புக்கு தற்போது கோழிகளும் சேர்ந்துள்ளன என்று கோழிகள் விற்போர் ஆச்சரியப்பட வைக்கின்றனர். பொதுவாக கோழிகளில் பிராய்லர், நாட்டுக்கோழி ஆகிய இரண்டை மட்டுமே கோழியினம் என்று அறிந்து வைத்திருப்போம். ஆனால் கோழி வகைகளில்

நெருப்புக்கோழி, வான்கோழி, கின்னிக்கோழி, ஈமுகோழி, சண்டைக்கோழி என்ற பலவகைகள் உள்ளன. இதில் நெருப்புக்கோழியை வீட்டில் வளர்ப்பது இல்லை. மேலும் சண்டைக்கு என்று தயார் செய்யும் சேவல்கள் வளர்ப்பு ஒருசில பகுதிகளில் மட்டுமே பிரபலமானதாகும். இந்நிலையில் தற்போது ஈமுகோழிகள் வளர்ப்பு மிகவும் பிரபலமாகி வருகின்றன. இதுதவிர நாட்டுக்கோழியும், பிராய்லர் கோ ழியும் நம்முடனும், நமது சன்டே சமையலுடனும் ஒட்டியே இருப்பதால் எளிதில் மறக்கவும் முடியாது, சுவைக்காமல் இருக்கவும் முடியாது.

இதுபோன்ற கோழி வகைகளில் வான்கோழியும், கின்னிக்கோழியும் மட்டும் சற்று வித்தியாசமானவை. ஏனெனில் வான்கோழி பிரியாணியை சுவைத்து பார்த்தவர்கள் எளிதில் அதன் சுவையை இழக்க விரும்பமாட்டார்கள். சாதாரணமாக கறிக்காகவே வளர்க்கப்படும் பிராய்லர் கோழியை காட்டிலும், வளர் ப்பு பிராணியாகவும், அழகிற்காகவும் வீட்டில் வளர்த்து அல்லது பண்ணைகளில் இயல்பாக வளர்த்து கிடைக்கும் வான்கோழியின் கறிக்கு இயற்கையிலேயே சுவை அ திகமுண்டு என்கின்றனர் சுவைத்துப் பார்த்தவர்கள். வான்கோழியை பொறுத்தவரை குஞ்சு பருவத்தில் வெறும் 200 கிராமில் இருந்துவிட்டு, வளர்ந்த பின்னர் அதன் எடை நம்மை பிரமிக்க வைப்பதில் ஆச்சரியமி ல் லை. இதன் காரணமாக சில மாதங்களில் சுமார் 10 கிலோ வரை வான்கோழிகள் எடை அதிகரித்து பிரியாணிக்கு தயாராகி விடுகின்றன. வான்கோழியின் கதை இவ்வாறெனில் கின்னிக்கோழியின் க தை வேறுமாதிரி. பொதுவாக கின்னிக்கோழியை வளர்ப்பதற்கு தனித்திறமையே வேண்டும் என்பார்கள். ஏனெனில் கின்னிக்கோழிகளின் முழுநேர வேலையே இரையை அரைத்துக் கொண்டு இருப்பது தான் .

ஆனால் அதேநேரத்தில் கின்னிக்கோழிகள் வளர்க்கப்படும் இடத்தில் காட்டுப்பகுதியாக இருந்தாலும் மனிதர்கள் தைரியமாக நடமாட முடியும் மற்றும் வாழவும் முடியும். ஒருவகையில் சொல்லப் போனால் நாயின் செய்கைகளில் ஒருசில குணங்கள் கின்னிக்கோழிகளிடம் உண்டு என்கின்றனர் வளர்ப்போர். இவற்றில் முக்கியமான ஒன்று கின்னிக்கோழிகள் வளரும் வீட்டிற்கு அருகில் விஷம் கொண்ட பாம்புகள் உள்பட விஷஜந்துகள் எதுவந்தாலும் எளிதில் அடையாளம் கண்டுகொண்டு எஜமானர்களுக்கு எச்சரிக்கை மணியாக கத்திக்கொண்டே இருக்கும். இதுமட்டுமின்றி வீட்டில் பழகிய நபர்களை தவிர வேறுயாராவது புதிய மனிதர்கள் வந்தாலும் கூட கின்னிக்கோழிகள் தங்களது கடமையை செய்ய தவறுவதில்லை என்கின்றனர். ஆனால் வான்கோழிக்கும், கின்னிக்கோழிக்கும் இரை போடுவதற்கு மட்டும் தனித்திறமை வேண்டும். இவ்வளவு சிறப்புகள் கொ ண்ட வான்கோழி மற்றும் கின்னிக்கோழிக் குஞ்சுகள் கோவில்பட்டியில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் பகுதிகளில் இருந்து வான்கோழி மற்றும் கின்னிக்கோழி பண்ணைகளில்

இருந்து நேரடியாக கொள்முதல் செய்துகோவில்பட்டியில் விற்பதற்கு கடை விரித்துள்ளனர். சேலம் பகுதியை சேர்ந்த பல குடும்பங்கள் இதையே தொழிலாக கொண்டு ஊர்ஊராக சென்று கடையாக விரித்து வான்கோழிகள் மற்றும் கின்னிக்கோழிக் குஞ்சுகளை விட்டுவிடுகின்றனர். மேலும் இவற்றிக்கு மூடை மூடையாக வைத்து இரையை கொட்டிக் கொண்டே இருக்கின்றனர். முக்கியமான வீதிகளில் அமைந்துள்ள மரத்து நிழலில் அமைக்கப்பட்டுள்ள வலைக்கூண்டிற்குள் அதற்குரிய சத்தத்துடன் மேய்வதை பார்த்து பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர். இப்போது வாங்கிச் சென்றால் இன்னும் சில மாதங்களில் வரவிருக்கும் தீபாவளிக்கு வான்கோழி தயாராகிவிடும் என்கின்றனர்.

சேலத்திலிருந்து மினிலாரிகளில் சுமார் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 குஞ்சுகள் வரை கொண்டு வந்து சுமார் பத்து நாட்கள் குடும்பத்துடன் டே ரா போட்டு விற்றுவிடுவதாக விற்பனைக்கு வந்துள்ளோர் கூறுகின்றனர். இதில் வான்கோழி ஜோடி 350க்கும், கின்னிக்கோழிகள் ஜோடி ரூ.250க்கும் விற்கப்படுகின்றன. மொ த்தத்தில் கோவில்பட்டியில் வான்கோழி மற்றும் கின்னிக்கோழி விற்பனை அமோகமாக நடந்து வருகிறது.

---

தினகரன்

## பயிர்கள் அழுகுவதை தடுக்க வீராணம் ஏரி கரையோரத்தில் தடுப்பு கட்டை கட்டும் பணி

பதிவு செய்த நேரம்:2012-06-07 11:42:18

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள சித்தமல்லி கிராமம், வீராணம் ஏரியின் மேற்கரையில் உள்ளது. இங்கு பெரும்பாலானோர் விவசாயிகள். ஆண்டு முழுவதும் விவசாய பணியை செய்து வருகின்றனர். ஆழ்குழாய் கிணற்று நீர், வீராணம் ஏரியின் தண்ணீரை பயன்படுத்தி விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் சென்னைக்கு குடிநீர் அனுப்ப ஏதுவாக வீராணம் ஏரியின் முழு கொள்ளளவான 47.50 அடி தண்ணீரை தொடர்ந்து பொது

பணித்துறையினர் தேக்கி வருகின்றனர். இதனால் ஏரியின் அருகே உள்ள விளை நிலங்களில் நீர் கசிவு ஏற்பட்டு பயிர்கள் பாதிக்கப்பட்டு வந்தது. இதைத்தொடர்ந்து வீராணம் ஏரிக் கரையோரத்தில் தடுப்பு கட்டைகள் அமைக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் பொதுப்பணித் துறை சார்பில் வீராணம் ஏரி கரையோரத்தில் கான்கிரீட்டால் ஆன தடுப்பு கட்டைகள் கட்டும் பணியை தொடங்கி செய்து வருகின்றனர். இப்பணி தீவிரமாக நடந்து வருகிறது.
இதனால் ஏரி கரை உடைவது தடுக்கப்படுவதோடு, நீர் கசிவும் குறைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மரக்கன்று நடும் பணி துவக்கம்

பதிவு செய்த நேரம்:2012-06-07 10:45:59

நாமக்கல்: நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள மகரிஷி நகரில் வனத்துறை சார்பில் தமிழக முதல்வரின் மரம் வளர்ப்பு திட்டத்தின் கீழ் மரகன்று நடும் பணி நேற்று துவங்கியது. அப்பகுதியில் உள்ள குழந்தைகளை கொண்டு மரக்கன்று நடும் பணி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வனச்சரகர் ஜோதிமணி, ரத்தினசபாபதி சுற்றுச்சூழல் கிராம வளர்ச்சி நிறுவன இயக்குனர் தில்லைக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
திருச்செங்கோடு அருகே
குடிநீர் கேட்டு கிராம மக்கள் மறியல் திருச்செங்கோடு: திருச்செங்கோடு அருகே குடிநீர் விநியோகத்தை சீரமைக்க வலியுறுத்தி கிராம மக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். திருச்செங்கோடு அருகே கருவேப்பம்பட்டி ஊராட்சியில் உள்ள மாங்குட்டை கிராமத்தில் கடந்த சில மாதங்களாக குடிநீர் விநியோகம் முறையாக இல்லை என்று புகார் எழுந்துள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றனர். இப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உள்ளாட்சி பிரதிநிதிகள், அதிகாரிகளிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லையாம்.
இதைக் கண்டித்து மாங்குட்டை பகுதியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று திருச்செங்கோடு -சங்ககிரி சாலையில் திடீர் மறியலில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்த மறியல் காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்படைந்தது.
இதுகுறித்து தகவலறிந்த திருச்செங்கோடு நகர் போலீசார் மற்றும் அதிகாரிகள் அங்கு சென்று மறியலில் ஈடுபட்டிருந்த கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். மாங்குட்டை பகுதியில்

குடிநீர் விநியோகத்தை சீரமைக்க நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். இதையத்து கிராமமக்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

## கூடலூர்,பந்தலூர் பகுதிகளில் மழை பொழிவு இல்லாததால் இஞ்சி விவசாயிகள் ஏமாற்றம்

பதிவு செய்த நேரம்:2012-06-07 10:42:34

பந்தலூர்: கூட லூர்,பந்தலூர் பகுதிகளில் இதுவரை எதிர்பார்த்த அளவு மழை பெய்யாததால் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
கூடலூர், பந்தலூர் ஆகிய பகுதிகளில் கடந்த 6 மாதங்களாகவே மழை பொழிவற்ற வறண்ட வானிலையே காணப்படுகிறது. வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் கோடை மழை பெய்யும். இதனை நம்பி கூடலூர்,பந்தலூர் பகுதிகளில் விவசாயிகள் இஞ்சியை பயிரிடுவர். ஆனால் இந்தாண்டு கோடை மழை அறவே பெய்யவில்லை. மே மாதத்தில் இரு நாட்கள் மட்டுமே மழை பொழிவு இருந்தது. அதுபோல் மே மாத இறுதியில் பருவ மழை பெய்ய துவங்கும். ஆனால் இம்முறை மழை இதுவரை விவசாயிகளை ஏமாற்றியே வருகிறது. மழை பொழிவு இல்லாததால் இரு தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளிலும் உள்ள குடிநீர் ஆதாரங்கள் வற்றி உள்ளன. பொது மக்கள் பல கிலோ மீட்டர் தூரம் சென்று குடிநீர் எடுத்து வர வேண்டிய நிலை காணப்படுகிறது. வனப்பகுதிகளிலும் கடும் வறட்சி தொடர்ந்து நிலவுகிறது. இதனால் வன விலங்குகள் உணவு மற்றும் நீர் தேடி அலைகின்றன. குறிப்பாக குடியிருப்பு பகுதிக்கு வருவதை வன விலங்குகள் வாடிக்கையாக கொண்டுள்ளன. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர். கோடை மழையை தொடர்ந்து பெய்யும் பருவ மழை பெய்யும் என்று கருதி இஞ்சியை பயிரிட காத்திருந்த விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பருவ மழைக்கு பின்னரே வழக்கமாக தேயிலை கவாத்து நடைபெறும்.
ஆனால் இதுவரை பருவமழை துவங்காததால் தேயிலை கவாத்து கேள்விக்குறியாகி உள்ளது. இதற்கிடையில் கடந்த 4ம் தேதி பந்தலூர் பகுதியில் லேசான சாரல் மழை பெய்தது.
இதனை பருவ மழை வருவதற்கான துவக்கமாக இப்பகுதி மக்கள் கருதுகின்றனர். இதனை உறுதி செய்வது போல் கடந்த இரு தினங்களாகவே அவ்வப்போது பந்தலூர் பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.
பருவ மழை துவங்கி இருப்பது விவசாயிகளிடையே நிம்மதியை ஏற்படுத்தி உள்ளது.
பந்தலூர்: கூட லூர்,பந்தலூர் பகுதிகளில் இதுவரை எதிர்பார்த்த அளவு மழை பெய்யாததால் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
கூடலூர், பந்தலூர் ஆகிய பகுதிகளில் கடந்த 6 மாதங்களாகவே மழை பொழிவற்ற வறண்ட வானிலையே காணப்படுகிறது. வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் கோடை மழை பெய்யும்.

இதனை நம்பி கூடலூர்,பந்தலூர் பகுதிகளில் விவசாயிகள் இஞ்சியை பயிரிடுவர். ஆனால் இந்தாண்டு கோடை மழை அறவே பெய்யவில்லை. மே மாதத்தில் இரு நாட்கள் மட்டுமே மழை பொழிவு இருந்தது. அதுபோல் மே மாத இறுதியில் பருவ மழை பெய்ய துவங்கும். ஆனால் இம்முறை மழை இதுவரை விவசாயிகளை ஏமாற்றியே வருகிறது. மழை பொழிவு இல்லாததால் இரு தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளிலும் உள்ள குடிநீர் ஆதாரங்கள் வற்றி உள்ளன. பொது மக்கள் பல கிலோ மீட்டர் தூரம் சென்று குடிநீர் எடுத்து வர வேண்டிய நிலை காணப்படுகிறது. வனப்பகுதிகளிலும் கடும் வறட்சி தொடர்ந்து நிலவுகிறது. இதனால் வன விலங்குகள் உணவு மற்றும் நீர் தேடி அலைகின்றன. குறிப்பாக குடியிருப்பு பகுதிக்கு வருவதை வன விலங்குகள் வாடிக்கையாக கொண்டுள்ளன. இதனால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர். கோடை மழையை தொடர்ந்து பெய்யும் பருவ மழை பெய்யும் என்று கருதி இஞ்சியை பயிரிட காத்திருந்த விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். பருவ மழைக்கு பின்னரே வழக்கமாக தேயிலை கவாத்து நடைபெறும்.

ஆனால் இதுவரை பருவமழை துவங்காததால் தேயிலை கவாத்து கேள்விக்குறியாகி உள்ளது. இதற்கிடையில் கடந்த 4ம் தேதி பந்தலூர் பகுதியில் லேசான சாரல் மழை பெய்தது.

இதனை பருவ மழை வருவதற்கான துவக்கமாக இப்பகுதி மக்கள் கருதுகின்றனர். இதனை உறுதி செய்வது போல் கடந்த இரு தினங்களாகவே அவ்வப்போது பந்தலூர் பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.

பருவ மழை துவங்கி இருப்பது விவசாயிகளிடையே நிம்மதியை ஏற்படுத்தி உள்ளது.


---

தினத் தந்தி

***ஜூன் 1 நிலவரம் வரலாறு காணாத அளவிற்கு கோதுமை கையிருப்பு உயர்வு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*ஜூன் 1–ந் தேதி நிலவரப்படி அரசு தானிய கிடங்குகளில் கோதுமை கையிருப்பு 5 கோடி டன்னை தாண்டியுள்ளது. இது, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 4 கோடி டன்னைக் காட்டிலும் மிக அதிகமாகும்.*



*இம்மாதம் முதல் தேதியன்று அரிசி கையிருப்பு 3.21 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இது, நிர்ணயித்த இலக்கான 1.22 கோடி டன்னை விட அதிகமாக உள்ளது. கோதுமை கையிருப்பு 3.82 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.*

*2009–ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு மாதந்தோறும் கையிருப்பு வைக்க வேண்டிய அளவிற்கு மேல் கூடுதலாக 30 லட்சம் டன் கோதுமை மற்றும் 20 லட்சம் டன் அரிசியை நீண்ட கால அடிப்படையில் கையிருப்பு வைத்து வருகிறது.*

*நெல், கோதுமை உற்பத்தி அதிகரித்து வருவதால் சேமிப்புக் கிடங்குகளில் இடப் பற்றாக்குறை கடுமையாக உள்ளது. இன்றைய நிலையில் அரசு தானிய கிடங்குகளில் 6.30 கோடி டன் உணவு தானியங்களை மட்டுமே சேமித்து வைக்க முடியும். ஆனால், கம்பு போன்ற சில சாதாரண தானியங்கள் உள்பட உணவு தானியங்கள் கையிருப்பு 8.24 கோடி டன்னாக உள்ளது. இதனால் பெருமளவு தானியங்களை திறந்தவெளிகளில் வைத்து பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.*

## பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியை 300 கோடி டாலராக உயர்த்த இலக்கு

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் (2012–2017) இறுதிக்குள் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியை 300 கோடி டாலராக உயர்த்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

*கலந்துரையாடல்*

*நறுமணப் பொருள்கள் வாரியத்தின் இயக்குனர் (சந்தைப்படுத்துதல்) எம்.ஆர்.சுதர்சன் பி.எச்.டீ.*

*தொழில் மற்றும் வர்த்தக சபை ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் இத்தகவலை வெளியிட்டார். தற்போது நம் நாட்டிலிருந்து ஆண்டுக்கு 150 கோடி டாலருக்கு நறுமணப் பொருள்கள் ஏற்றுமதியாகி வருகின்றன. அளவின் அடிப்படையில் இது 32 லட்சம் டன்னாக உள்ளது. இது, உலக அளவில் மேற்கொள்ளப்படும் நறுமணப் பொருள்களின் ஏற்றுமதியில் ஏறக்குறைய 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்தியா, கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில், 150 கோடி டாலர் மதிப்புள்ள 5.26 லட்சம் டன் நறுமணப் பொருள்களை ஏற்றுமதி செய்தது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது ரூ.6,841 கோடியாக இருந்தது. நம் நாட்டு நறுமணப் பொருள்களுக்கு சர்வதேச அளவில் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. இந்நிலையில் மதிப்புக் கூட்டி ஏற்றுமதி செய்தால் நறுமணப் பொருள்கள் ஏற்றுமதி மேலும் அமோக வளர்ச்சி அடையும் என சுதர்சன் மேலும் கூறினார்.*

*இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தேசிய தோட்டக்கலை திட்ட இயக்குனர் சஞ்சீவ் சோப்ராவும் பங்கேற்றார். உலக அளவில் எழும் போட்டிகளை எதிர்கொள்ள வேண்டுமானால் நறுமணப் பொருள் பதப்படுத்துதல் மையங்களும், ஏற்றுமதி நடவடிக்கைகளும் சர்வதேச உணவு பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.*

தொழில் பூங்காக்கள்

*மிளகாய், மிளகு, ஏலக்காய் உள்ளிட்ட பல்வேறு நறுமணப் பொருள்களின் அறுவடைக்குப் பிறகு அவற்றை பதப்படுத்தி, பராமரிப்பதற்காக தொழில் பூங்காக்களை அறிமுகம் செய்வதில் அரசு–தனியார் கூட்டுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த பூங்காக்களில் தரம் பிரித்தல், வகைப்படுத்துதல், பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.*

## *நடப்பு நிதி ஆண்டில் உரங்களுக்கான தேவை 20 சதவீதம் குறையும்?*

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

மும்பை

*நடப்பு நிதி ஆண்டில் (2012–13) உரங்களுக்கான தேவைப்பாடு 15 சதவீதம் முதல் 20 சதவீதம் குறையும் என டாட்டா கெமிக்கல்ஸ் நிறுவனம் முன்னறிவிப்பு செய்துள்ளது. ரூபாய் மதிப்பு கடுமையாக சரிவடைந்துள்ள நிலையில் மத்திய அரசின் மானியங்கள் குறைக்கப்பட்டுள்ளதால் உரங்கள் விலை உயர்ந்து வருகின்றன. நடப்பு நிதி ஆண்டில் பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் சார்ந்த உரங்களுக்கான மானியம் 20 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் தேவைப்பாடு சரிவடையும் நிலை உள்ளது என்று கூறப்படுகிறது. நம் நாட்டில் சென்ற நிதி ஆண்டில் 1.08 கோடி டன் டீ.ஏ.பி. உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொட்டாஷ் உர பயன்பாடு 30 லட்சம் டன்னாக இருந்தது.*

*கடந்த 12 மாதங்களில் டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு 19 சதவீதம் குறைந்துள்ளது.*

*இதனால் இறக்குமதி செய்யப்படும் உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. டாட்டா கெமிக்கல்ஸ் நிறுவனம் கனடாவிலிருந்து உரங்களை இறக்குமதி செய்து வருகிறது. இந்நிறுவனத்தின் மொத்த வருவாயில் உரங்களின் பங்களிப்பு 50 சதவீதமாக உள்ளது. ரூபாய் மதிப்பு சரிவால் சங்கிலித் தொடர் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. கச்சா எண்ணெய் உள்பட, பல்வேறு அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதிக்கான செலவினங்கள் உயர்ந்து விடுகின்றன. இதனால் மத்திய அரசின் மானிய சுமை அதிகரித்து நிதிப் பற்றாக்குறை கடுமையாக உயர்கிறது.*

**நடப்பு ஆண்டில் 43 சதவீதம் அதிகரிக்க வாய்ப்பு அமெரிக்காவிற்கான மாம்பழம் ஏற்றுமதி 130 டன்னை எட்டும்**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*அமெரிக்காவிற்கான மாம்பழம் ஏற்றுமதி, நடப்பு 2012–ஆம் ஆண்டில் 43 சதவீதம் அதிகரித்து 130 டன்னை எட்டும் என வேளாண் மற்றும் பதப்படுத்திய உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபெடா) மதிப்பீடு செய்துள்ளது. ஏற்றுமதி தரம் வாய்ந்த மாம்பழங்கள் அதிக அளவில் இருப்பதும், அமெரிக்காவில் தேவைப்பாடு அதிகரித்துள்ளதுமே இதற்கு முக்கிய காரணங்களாகும்.*

*இதுவரை...*

*நடப்பு ஆண்டில் இதுவரை அமெரிக்காவிற்கு 90 டன் மாம்பழம் ஏற்றுமதியாகி உள்ளது. இதே அளவில் ஏற்றுமதி நீடிக்கும் பட்சத்தில் ஆண்டு இறுதியில் மொத்த ஏற்றுமதி 130 டன் மாம்பழங்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2011–ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு மொத்தம் 91 டன் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.*

*அமெரிக்காவில் உணவுப் பொருள்கள் இறக்குமதியில் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இந்நிலையில் கதிர்வீச்சு முறையில் சுத்திகரிக்கப்பட்ட பிறகே அந்நாட்டிற்கு மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கதிர்வீச்சு சுத்திகரிப்பு முறையால் உணவு விஷமாதல், சேதமடைதல் போன்ற அபாயங்கள் தவிர்க்கப்படுகின்றன.*

மேலும் பதப்படுத்திய உணவுப் பொருள்களின் ஆயுள் காலமும் நீடிக்கிறது.

கதிர்வீச்சு முறையில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதையே அமெரிக்கா விரும்புகிறது. எனவே மாம்பழம் அதிகம் விளையும் மாநிலங்களில் நவீன கதிர்வீச்சு சுத்திகரிப்பு மையங்கள் போதிய அளவில் உருவாக்கப்பட்டால் அமெரிக்காவிற்கான மாம்பழ ஏற்றுமதி 200 முதல் 300 டன்னாக உயர வாய்ப்புள்ளது என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

தற்போது மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் மட்டுமே கதிர்வீச்சு சுத்திகரிப்பு மையம் ஒன்று உள்ளது. இதனால் இங்கும், குஜராத்திலும் விளையும் அல்போன்சா மற்றும் கேசார் ரக மாம்பழங்கள் மட்டுமே அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகின்றன என்று அபெடா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தடை நீக்கம்

அமெரிக்காவின் கடுமையான கட்டுப்பாடுகளால் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்திய மாம்பழங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் 2007–ஆம் ஆண்டில் அமெரிக்கா இந்த தடையை நீக்கியது. பின்னர் அந்நாட்டிற்கான மாம்பழம் ஏற்றுமதி விறுவிறுப்படைந்தது.

எனினும் கடந்த மூன்று ஆண்டுகளாக அமெரிக்காவிற்கு 100 டன்னிற்கும் குறைவாகவே மாம்பழங்கள் ஏற்றுமதியாகி வருகின்றன. நடப்பு ஆண்டில் நாட்டின் மொத்த மாம்பழ ஏற்றுமதி 80,000 டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.